1981 ஜனவரி 30]

பெரியார் மாவட்டத்தில் நூற்பாலை.

*வினா எண் 117-திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டத்தில் நூல் நூற்பாலை ஒன்று புதிதாக ஆரம்பிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: இல்லை.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் புதிதாக 35 கூட்டுறவு நூற்பாலைகள் ஆரம்பிக்கப்படுவதாக இருக்கிறது என்று கூறப்பட்டது; அதிலே ஏதாவது ஒன்றை அங்கே ஆரம்பிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, அவை, தனியார் துறையிலே ஆரம்பிக்கப்படுவதற்காக அனுமதி பெற்றிருப்பவை. அவர்கள் கேட்டிருந்த கேள்வி கூட்டுறவு நூற்பாலை ஆரம்பிக்கப்படுமா பெரியார் மாவட்டத்தில் என்பது. அது தான் இல்லை என்று சொன்னேன்.

திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பருத்தி அதிகமாகக் கிடைக்கின்ற தேனி பகுதியில் பருத்தி உற்பத்தியாளர்கள் கூட்டுறவு நூற்பாலை ஒன்றை ஆரம்பிக்கின்ற செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பெரியார் மாவட்டத்தைப் பற்றிய கேள்வி.

திரு என. கிட்டப்பா: தலைவரவர்களே, மதிப்பிற்குரிய காங்கிரஸ் கட்சியினர் ஆட்சியிலேயிருந்தபொழுது தமிழ்நாட்டில் உள்ள எல்லா மாவட்டங்களிலேயும் மாவட்டத்திற்கு ஒரு கூட்டுறவு நூற்பாலை ஏற்படுத்தும் திட்டத்தைக் கொண்டு வந்ததை நாம் எல்லோரும் நன்கு அறிவோம. புதிதாக நமது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பெரியார் மாவட்டம் என்ற மாவட்டத்தைத் துவக்கியிருக்கிறது. அந்த அடிப்படையில் பெரியார் மாவட்டத்தில் ஒரு கூட்டுறவு நூற்பாலையை உருவாக்க அரசு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி ஆட்சியிலேயிருந்தபொழுது மாவட்டத்திற்கு ஒன்று என்று ஆரம்பிக்கப்பட்டதாகச் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உண்டா இல்லையா என்பதை மட்டும் சொன்னால் போதும்.

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு: அவர்கள் கேட்ட கேள்வியிலே உண்டா இல்லையா என்று கேட்டிருந்தால் அந்த மாதிரி சொல்லியிருக்கலாம். எனவேதான் சொல்கிறேன். அதற்குப் பின்னாலே ஏழு வருடங்களுக்கு ஒரு ஆட்சி இருந்து, புதிதாக மாவட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அந்த மாவட்டத்திலே அந்த முறையைப் பின்பற்றி கூட்டுறவு நூற்பாலையை ஆரம்பித்திருக்கலாம். ஆனால் இப்பொழுது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் பொறுப்பேற்ற பிறகு அதைப்போல மாவட்டந்தோறும் கூட்டுறவு நூற்பாலை ஆரம்பிக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு கூட்டுறவு நூற்பாலைகள் இல்லாத மாவட்டங்களாக இருக்கிற கோயம்புத்தூர் மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம், தர்மபுரி மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் ஒவ்வொரு கூட்டுறவு நூற்பாலை ஆரம்பிக்கப்படுவதற்கான திட்டங்கள் அரசினுடைய தீவிரமான பரிசீலனையில் இருக்கின்றன.

திரு. தி கா நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் ஆரம்பிக்கவில்லை, தனியார் துறைக்குக் கொடுப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி தனியார் யாரேனும் அந்த மாவட்டத்தில் மில் ஏற்படுத்த விண்ணப்பித்தால் அவர்களுக்குக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல் பெரியார் மாவட்டத்தில் ஏற்கனவே ஒரு கூட்டுறவு நூற்பாலை இயங்கி வருகிறது. புதிதாக 37 நூற்பாலைகள் துவங்குவதற்கு தனியார்கள் உரிமம் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் எந்த, எந்த மாவட்டத்திலே கேட்டிருக்கிறார்கள் என்பது போன்ற விவரங்கள் எல்லாம் இப்பொழுது என்னிடத்திலே இல்லை. தனியாகக் கேட்பாரானால் விவரம் தரப்படும்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பொதுவாகவே நூற்பாலைகளை, சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே, தனியார் துறைக்குத் தருவதாக அறிவித்திருக் கிறார்கள். இது சோஷலிசக் கொள்கைக்கு முரணானது அல்லவா? இந்த அரசு தனியார் துறையை ஊக்குவிக்கிறதா? அல்லது பொதுத் துறைக்கு வரப்போகிறதா? இல்லை, இரண்டும் கலந்த ஜாயின்ட் செக்டர் கொள்கைக்கு வரப் போகிறதா? எது உங்களது நிரந்தரமான கொள்கை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

1981 ஜனவரி 3]

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு: அதற்கு முன்னாலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடத்திலே நான் ஒன்று அறிந்து கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களோ அல்லது அவர் சார்ந்திருக்கிற கட்சியோ......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விக்கு மட்டும் அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். உறுப்பினரிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புவதையெல்லாம் இப்பொழுது கேட்க வேண்டாம், தனியாக வெளியிலே, லாபியிலே வைத்துக்கொள்வது நல்லது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே பலமுறை இந்த மன்றத்தில் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். அரசின் சார்பிலே எந்த, எந்தத் துறைகளில் எல்லாம், பொதுத் துறையிலோ அல்லது கூட்டுத் துறையிலோ ஆரம்பிக்க முடியுமோ அதிலே எல்லாம் அரசு ஆரம்பிக்கத் தயாராக இருக்கிறது. அதைப்போலவே தனியார் களையும் ஊக்குவித்து; தொழில் வளர்ச்சி வேகமாகப் பரவ வேண்டுமென்ற நோக்கத்தோடு, தனியார்களுக்கும் முடிந்த அளவுக்கு ஊக்கம் கொடுத்து, தனியார் துறையிலேயும் அதிகமான தொழில்கள் தமிழகத்திலே வளரவேண்டுமென்றுதான் இந்த அரசு விரும்புகிறது.

திருப்பூர் நகரில் கூட்டுறவு நூற்பாலை

*வினா எண் 118-திரு. ஆர். மணிமாறன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் கூட்டுறவு நூற்பாலை அமைக்கும் திட்டம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில் அது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:

(அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஆர். மணிமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, 25,000 ஸ்பிண்டில் இருக்கும்படியாக ரூ. 6½ கோடி அளவில் அந்தக் கூட்டுறவு நூற்பாலைக்கான பிராஜக்ட் ரிப்போர்ட் தயாரிக்கப் பட்டு, அரசினுடைய பார்வைக்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் அனுப்பப்பட்டிருப்பதாக அறிகிறேன். மிக விரைவாக அந்தக் கூட்டுறவு நூற்பாலை ஏற்படுத்துவதன்வாயிலாக ஏறத்தாழ 1,000 தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும்படியான நல்ல சூழ்நிலை அங்கே ஏற்படும். ஆகவே, துரிதமாகச் செயல்படுத்த அரசு முனையுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS